## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர்

## மற்றும்

## தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம்

## இளமறிவியல் மாணவர் சேர்க்கை 2023–2024

2023–2024 ஆம் கல்வியாண்டு முதல், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயமுத்தூர் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் ஆகிய பல்கலைக்கழகங்கள் இணைந்து பொதுவான இணையதள விண்ணப்பம் மூலம் இளமறிவியல் பட்டப்படிப்பில் சேர தகுதியான மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்களை வரவேற்றன. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஒருங்கிணைப்பு முகவராக செயல்படுகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 14 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும், 3 பட்டயப்படிப்புகளுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெறும். தமிழ்நாடு டாக்டர் ஜெ.ஜெயலலிதா மீன்வளப் பல்கலைகழகத்தில் 6 இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கும் மற்றும் மூன்று தொழில்முறை பாடப்பிரிவுகளுக்கும் மாணவர் சேர்க்கை நடைபெறும்.

இந்த கல்வியாண்டில் 5361 இடங்களை (உறுப்புக் கல்லூரிகளுக்கு –2555 + இணைப்பு கல்லூரிகளுக்கு – 2806) நிரப்புவதற்கு தகுதியான விண்ணப்பங்கள் இணையதள வாயிலாக 10.05.2023 முதல் 09.06.2023 வரை பெறப்பட்டு வந்தன.

இளமறிவியல் மாணவர் சேர்க்கைக்கு மொத்தம் 41434 பேர் விண்ணப்பங்களை விண்ணப்பித்துள்ளார்கள். அவர்களுள் 36612 பேர் தரவரிசைக்கு தகுதியானவர்களாக கருதப்பட்டனர். அவர்களுள் பெண் விண்ணப்பித்தாரர்களின் எண்ணிக்கை (21,384), ஆண் விண்ணப்பித்தாரர்களின் எண்ணிக்கை (12,333). ஆண் பெண் விகிதம் 580 : 1000.

அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான (7.5%) இடஒதுக்கீட்டில் 10,887 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். ஆறாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை அரசாங்க பள்ளிகளில் பயின்ற மாணவர்களின் EMIS எண்கள் தமிழ்நாடு

அரசாங்கத்தின் சரிபார்ப்புக்கு சமர்ப்பிக்கப்பட்டு உள்ளது. இந்த கல்வியாண்டில் இந்த இடஒதுக்கீட்டின் கீழ் 403 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். இந்த மாணவர்களின் கல்வி செலவை தமிழக அரசே ஏற்கும்.

தமிழ்வழியில் இளமறிவியல் (மேதமை) வேளாண்மை (50 இடங்கள்) மற்றும் இளமறிவியல் (மேதமை) தோட்டக்கலை (50 இடங்கள்) ஆகிய இரண்டு பட்டப்படிப்புகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. தமிழ்வழியில் பயில 9997 மாணவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

முன்னாள் இராணுவ வீரர்களின் இடஒதுக்கீட்டில் 20 இடங்களுக்கு 309 பேர் விண்ணப்பித்துள்ளனர். மாற்று திறனாளி மாணவர்களுக்கு மொத்தம் 5% இடங்கள் ஒதுக்கப்பட்டு இந்த கல்வியாண்டில் 128 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். மேலும், சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான இடஒதுக்கீட்டில் 790 விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவர்களில் 20 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள். தொழில்முறைக் கல்வி பயின்ற மாணவர்களுக்கு 5% இடங்கள் ஒதுக்கப்பட்டு 242 மாணவர்கள் சேர்க்கப்படுவார்கள்.

முதல் 25 இடங்களைப் பிடித்தவர்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| தரவரிசை | **மாணவர்களின் பெயர்** | மதிப்பீட்டு புள்ளிகள் | வகுப்பு பிரிவு | **மாவட்டம்** |
|---|---|---|---|---|
| 1 | திவ்யா G | 200 | MBC / DNC | **விழுப்புரம்** |
| 2 | ஸ்ரீ ராம் P | 200 | MBC / DNC | **மதுரை** |
| 3 | முத்துலெட்சுமி S | 200 | BC | **தென்காசி** |
| 4 | சிவசங்கர் S | 199.5 | BC | **திருநெல்வேலி** |
| 5 | ஷோபனா G | 199.5 | MBC / DNC | **விழுப்புரம்** |
| 6 | தக்ஷனா S T | 199.5 | BC | **நாமக்கல்** |
| 7 | மேனகா J | 199.5 | MBC / DNC | **விழுப்புரம்** |
| 8 | மலர்விழி A | 199.5 | BC | **சென்னை** |
| 9 | ஐஸ்வரியா S | 199.5 | BC | **சிவகங்கை** |
| 10 | யோகதர்ஷினி S | 199.5 | BC | **திருச்சி** |
| 11 | அபிஷேக் P N | 199.5 | BC | **தருமபுரி** |
| 12 | வாணிஸ்ரீ V | 199.5 | SC | **கடலூர்** |
| 13 | பிரியரஞ்சனி J | 199.5 | SC | **அரியலூர்** |
| 14 | தீபி B N | 199.5 | BC | **கன்னியாகுமரி** |
| 15 | லோபஷினி M | 199.5 | BC | **நாமக்கல்** |
| 16 | சக்திகுமரன் S | 199.5 | MBC / DNC | **அரியலூர்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 17 | கிரிஜா B | 199.5 | BC | **திண்டுக்கல்** |
| 18 | பண்பரசி P | 199.5 | MBC / DNC | **விழுப்புரம்** |
| 19 | வெற்றிவேல் I | 199.0 | BC | **கரூர்** |
| 20 | ஈஷஞ்ஜெனா S | 199.0 | BC | **திண்டுக்கல்** |
| 21 | நித்தியஸ்ரீ K | 199.0 | MBC / DNC | **கடலூர்** |
| 22 | ஸ்ரீ மகாலட்சுமி G | 199.0 | BC | **ஈரோடு** |
| 23 | சந்தியா A | 199.0 | BC | **ஈரோடு** |
| 24 | அருண் உலகப்பன் S | 199.0 | BC | **நாகப்பட்டினம்** |
| 25 | விஷ்ணு ப்ரீத்தி G | 199.0 | BC | **ஈரோடு** |

முன்னாள் இராணுவ வீரர், மாற்று திறனாளிகள் மற்றும் சிறந்த விளையாட்டு வீரர்கள் போன்ற சிறப்பு இடஒதுக்கீடுகளுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு ஜூன் 2023 மூன்றாவது வாரத்தில் இருந்து தொடங்கப்படும் மற்றும் தகுதியானவர்கள் ஜூன் கடைசி வாரத்தில் கலந்தாய்விற்கு அழைக்கப்படுவார்கள். இணையவழி கலந்தாய்வு மற்றும் பொது இடஒதுக்கீட்டிற்கான சான்றிதழ் சரிபார்ப்பு ஜூலை 2023 முதல் வாரத்திலிருந்து தொடங்கும்.